# சார்பு நீதிமன்றம், அவிநாசி

# MCOP - 89/2018

நாள் – 23.01.2025

**PW – 1** : கோமதி

**க/பெ.** : விஸ்வநாதன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of January 2025)**

## குறுக்கு விசாரணை

1. இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் போலீசார் மருத்துவமனைக்கு வந்து எனது கணவரிடம் விசாரித்து வாக்குமூலம் எழுதி கொண்டு கையொப்பம் வாங்கி சென்றார்கள். விபத்து சமயம் இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டிச் சென்றேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும், விபத்து சமயம் வாகனத்தை நான் தான் ஓட்டிச் சென்றேன் என்று சொன்னால் சரியல்ல எனது கணவர் தான் ஓட்டிச் சென்றார். விபத்து சமயம் நான் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றேன் என்றும், அதனால் தான் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் வழங்கிய ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் வாகனத்தின் ஓட்டுநர் என்ற களத்தில் கோமதி என்று எனது பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். TN-36-Y-2799 என்ற Scooty pep இருசக்கர வாகனமானது எனது பெயரில் இல்லை என்றால் சரிதான். அதற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். எனக்கு இந்த விபத்து ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று மனுவில் சொல்லியுள்ளேன் என்றும், ஆனால் மருத்துவர் வழங்கிய

காயச்சான்றிதழில் சாதாரண காயம் தான் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. நான் பால் வியாபாரத்தின் மூலம் மாதம் ரூ.10,000/- சம்பாதித்து வந்ததாக சொல்லியுள்ளது இந்த வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

2. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் இந்த வழக்கிற்காக வேண்டி போலியாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தானது என்னுடைய அஜாக்கிரதையால் தான் ஓட்டிச் சென்று வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றும், அதனால் 2-ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகையும், வட்டிவீதமும் அதிகம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த மனுவானது 2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR Digitally signed by C SENTHIL KUMAR Date: 2025.01.23 16:24:59 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**

ௐ